கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

சேலம் கிழக்கு, சேலம் மத்திய, சேலம் மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் பங்கு பெறும் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்

தலைமைக் கழகம் அறிவிப்பு !

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் முன்னிலையில், சேலம் கிழக்கு, சேலம் மத்திய, சேலம் மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கிளைக் கழகச் செயலாளர்கள் பங்குபெறும் கழகச் செயல்வீரர்கள் கூட்டம், இன்று (10-06-2023 - சனிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில், சேலம், ஐந்து ரோடு, ரத்தினவேல் ஜெயக்குமார் திருமண மண்டபத்தில் நடைபெறும்.

அதுபோது சேலம் கிழக்கு, சேலம் மத்திய, சேலம் மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 09.06.2023

தலைமைக் கழகம்,
தி.மு.க.

மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்!

சென்னை, ஜூன் 10- மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என மாவட்ட மீன்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது. கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் இன்று பிற்பகல் முதல் மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என மாவட்ட மீன்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது. வங்க கடல் பகுதியில் நிலவும் மோசமான வானிலை மற்றும் வேகமாக காற்று வீசும் காரணத்தால் மாவட்ட மீன்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சி நடைபெறுகிறது!

முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் 100 நாள் திட்டப் பணியாளர்கள் பாராட்டு!

திருச்சி, ஜூன்10-

தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சி நடைபெற்று வருவதாக, நூறு நாள் திட்டப்பணியாளர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதாக முதலமைச்சரிடம் அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

டெல்டா மாவட்டங்களில் நடைபெற்று வரும்தூர்வாரும்பணிகளை ஆய்வுசெய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருச்சி மாவட்டம் செங்கையூரிலிருந்து இருதய புரத்துக்குச் சென்று கொண்டிருந்தார். அப்போது, ஆலங்குடி மகாஜனம் என்ற இடத்தில்.100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பெண்கள் பணியாற்றி கொண்டிருந்தனர்.

இதையடுத்து, காரிலிருந்து இறங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அங்கு பணியாற்றி கொண்டிருந்த பெண்களிடம் கலந்துரையாடினார். தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சி நடைபெற்று வருவதாக, நூறு நாள் திட்டப்பணியாளர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு தெரிவித்தனர். தேர்தல்நேரத்தில்கூறியதை நிறைவேற்றி வருவதாக முதலமைச்சரிடம் அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஆளுநர்களின் பிடியிலிருந்து பல்கலைக்கழகங்களைக் காப்பாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது!

பட்டமளிப்பு விழாவிற்கு தேதி கொடுக்காமல் ஆளுநர் இழுத்தடிப்பதா?

'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜூன் 10- பாரதியார், பாரதிதாசன், மனோன்மணீயம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழாக்களுக்கு தேதி கொடுக்காமல் ஆளுநர் இழுத்தடித்து வருகிறார். இதனால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆளுநர்களின் பிடியிலிருந்து பல்கலைக்கழகங்களை காப்பாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டதாக 'தீக்கதிர்' நாளேடு 9.6.2023 தேதியிட்ட இதழில் - 'கனவை சுருக்குவதா?' என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

தீக்கதிர்

2023 ஜூன் 09 வெள்ளிக்கிழமை

கனவை கருக்குவதா?

'செய்தக்க அல்ல செயக்கெடும்-செய்தக்க செய்யாமை யானுங் கெடும்'

-என்பது வள்ளுவர் வாக்கு. செய்யத்தகாத செயல்களை செய்வதும், செய்ய வேண்டிய வற்றை செய்யாமல் விடுவதும் கெடுதலில் முடியும் என்பது இதன் பொருள்.

இந்தக் குறளுக்கு முழு உதாரணமாக திகழ்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. செய்ய வேண்டிய வற்றை செய்யாமல் தேவையில்லாததை செய்து கொண்டிருக்கிறார். துணைவேந்தர்கள் இரண்டு நாள் மாநாட்டை ஊட்டியில் கூட்டி முதல் வருடைய வெளிநாட்டுப் பயணம் குறித்து மறைமுகமாக விமர்சிக்கிறார். ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளை வெளிப்படையாகப் பேசுகிறார் இவர்.

அது வருமாறு:-

'செய்தக்க அல்ல செயக் கெடும் - செய்தக்க

செய்யாமை யானுங் கெடும்'

-என்பது வள்ளுவர் வாக்கு. செய்யத்தகாத செயல்களை செய்வதும், செய்ய வேண்டிய வற்றை செய்யாமல் விடுவதும் கெடுதலில் முடியும் என்பது இதன் பொருள்.

இந்தக் குறளுக்கு முழு உதாரணமாக திகழ்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. செய்ய வேண்டிய வற்றை செய்யாமல் தேவையில்லாததை செய்து கொண்டிருக்கிறார். துணைவேந்தர்கள் இரண்டு நாள் மாநாட்டை ஊட்டியில் கூட்டி முதல் வருடைய வெளிநாட்டுப் பயணம் குறித்து மறைமுகமாக விமர்சிக்கிறார். ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளை வெளிப்படையாகப் பேசுகிறார் இவர்.

ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கைக்கு வக்காலத்து வாங்குவதன் மூலம் தமிழக அரசோடு நேரடியாக மோதல் போக்கை கடைப்பிடிக்கிறார். மறுபுறத்தில் தமிழக பட்டதாரி இளைஞர்களுக்கு வஞ்சகம் செய்கிறார்.

திருச்சி பாரதிதாசன், கோவை பாரதியார், நெல்லை மனோன்மணீயம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழா நடத்த ஆளுநர் தேதி கொடுக்காததால் 929 லட்சம் மாணவர்கள் படித்த படிப்புக்கு பட்டம் பெற முடியாமல் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, ஒன்றிய அமைச்சர்களை அழைத்து பட்டமளிப்பு விழாக்களை நடத்த வேண்டுமென்று ஆளுநர் கூறுவதால்தான் பட்டமளிப்பு விழாக்கள் தாமதமாகின்றன. அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பட்டமளிப்பு விழாக்களை நடத்த தமிழக அரசு தயாராகவுள்ளது. ஆனால் விழா நடத்துவது குறித்து ஆளுநர் கேட்பது கூட இல்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

பட்டமளிப்பு விழாக்களை நடத்துவதற்கு ஆளுநரின் ஒப்புதல் கேட்டு கடிதம் அனுப்பப் பட்டதாகவும் அதற்கு பதிலளிக்க ஆளுநர் மாளிகை தாமதப் படுத்துகிறது என்றும் துணைவேந்தர்கள் கூறுகின்றனர்.

தமிழக பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்டம் துவங்கி இளங்கலை பட்டம் வரை முடித்த மாணவர்கள் இதுவரை பட்டம் கிடைக்காமல் தவிக்கின்றனர். இதனால் உயர்கல்விக்குச் செல்வது, வெளிநாடுகளுக்கு பணியாற்ற மற்றும் படிக்கச்செல்வது தடைபடுவதாக மாணவர்கள் குமுறுகின்றனர்.

பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற பதவியை கையில் வைத்துக் கொண்டு ஆர்.என்.ரவி தமிழக இளைஞர்களின் கனவில் மண்ணள்ளிப் போடுவது கண்டிக்கத்தக்கது.

தன்னுடைய பதவிக்கு சம்பந்தமில்லாத எதை எதையோ உளறிக்கொட்டும் ஆளுநர் பட்டமளிப்பு விழாக்களை நடத்தவிடாமல் தடுப்பது ஏன்? ஒன்றிய அமைச்சர்கள் பங்கேற்புடன் தான் பட்டமளிப்பு விழாக்களை நடத்த வேண்டுமென்று எந்த விதியும் இல்லையே? பல்கலைக்கழக துணைவேந்தர்களை மாநில அரசுகளே நியமித்துக் கொள்ள அதிகாரம் வேண்டுமென தமிழக சட்டப் பேரவையில் மாநில அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. கேரள சட்டப் பேரவையிலும் இதே போன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆளுநர்களின் பிடியிலிருந்து பல்கலைக்கழகங்களை காப்பாற்ற வேண்டிய நேரம் வந்து விட்டது.'

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ருத்ராட்சம் அணிவதால் பூனை போதகராகிவிட முடியாது!

என் இனிய தமிழ்ச் சொந்தங்களே.....!

திருமணத்தை நடத்தி வைக்க வந்த புரோகிதர் முதல் இரவு அறைக்குள் நுழைந்து மணமகளோடு பாலைப் பகிர்ந்து பின்னர் படுக்கையையும் பகிர்ந்து கொள்ள முனைந்தால் அதனைப் பார்த்துக் கொண்டு மாப்பிள்ளை சும்மா இருப்பாரா? மாப்பிள்ளை வீட்டுக்காரரும் பெண் வீட்டுக்காரரும் வேடிக்கை பார்த்துக் கொண்டா இருப்பார்கள்? புரோகிதர் உடல் புண்ணாக்கப்பட்டு வீதியிலே வீசி எறியப்படமாட்டாரா? தற்போது இதுதானே தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது!

அடுத்தவர்களின் உரிமைகளை முடக்குவதற்கோ காலதாமதம் செய்வதற்கோ ஜனநாயகத்தில் எவருக்குமே அதிகாரம் கிடையாது! கல்யாணத்தை நடத்துகிற புரோகிதர் தட்சணை வாங்கலாமே தவிர வேறு எந்த உறவோ உரிமையோ கல்யாண வீட்டில் அவருக்கு கிடையாது! இந்தப் புரோகிதரின் நிலைமை தான் மாநிலங்களில் ஆளுநர்களுக்கும் உண்டு! எத்தனை மேதைகள் எத்தனையோ விதமாக நம்ம ஆட்டுத்தாடிக்கு புரியிற மாதிரி எடுத்துச் சொல்லிட்டாங்க! ஆனால் அது நாய் வால் மாதிரி நிமிரவே மாட்டேங்குது. புரிஞ்சிக்கவும் மாட்டேங்குது!

பாம்புக்கு பாலை வார்த்து பக்கத்துல படுக்க வைத்து விட்டால் அதற்கு பசுவோட குணம் வந்துடுமா? அல்லது பல்லிலேஇருக்கிற விஷம் மறைந்திடுமா? நமது மாநில பல்கலைக்கழகங்களிலே ஒன்பது லட்சத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவியருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. பல பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழா நடத்தப்படவில்லை! ஏனென்று கேட்டால் எல்லா இடமும் ஒரே பதில் தான்! ஆளுநரின் தேதி கிடைக்கவில்லை! அது ஒரு கவுரவப் பதவி! ராஜபோக வாழ்க்கை, கை நிறைய சம்பளம், தானா சிந்திச்சு உருவாக்கி செய்ய வேண்டிய வேலை எதுவுமே இல்லை! அதனால் சட்டசபை கூட்டங்கள் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்கள் போன்ற சில கௌரவப் பணிகள் அவருக்கு தரப்பட்டன. அதையும் வேண்டுமென்றே செய்யாமல் தவிர்ப்பதும். ஒன்றிய அமைச்சர்களைமட்டுமே அழைத்து விழாக்களை நடத்துவதும். வேண்டுமென்றே தமிழக அமைச்சர்களை ஒதுக்குவதும். ஆட்டுத்தாடி தமிழ்நாட்டில் ஒரு 'இணை அரசாங்கத்தை' நடத்தி குழப்பங்களை விளைவிப்பதும்.... தன் திறமையை இப்படியெல்லாம் செய்து காட்டி ஒன்றிய அரசின் பார்வையை தன் பக்கம் ஈர்த்து தானும் அரசியலில் நுழைந்து முன்னேற முயல்வதும் உகந்ததல்ல! ருத்ராட்சம் அணிந்து விடுவதனால் பூனை போதகர் ஆகி விட முடியாது! ஒன்பது லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படாமல் அவர்கள் எதிர்காலத்தை இருட்டடிக்க காலதாமதம் செய்வதை 8 கோடி தமிழர்களும் வேடிக்கை பார்த்துக்கொண்டு இது விஷயமாக ஊடகங்களில் பட்டிமன்றங்கள் நடத்திக் கொண்டு பொறுமை காப்பது உலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்கின்ற நிலைமையை ஏற்படுத்திவிடும்!

பார்வையற்றவர்கள் வாழுகின்ற இடத்துக்கு....வழிகாட்டுவோர் வாழுகின்ற இல்லம் எனப் பெயரிட்டு அழைப்பது போல் அதிகாரங்கள் அற்ற பதவியில் அமர்ந்திருக்கின்ற அவசியமற்ற ஆட்டுத்தாடி, ஆளுநர் மாளிகையை இன்னும் ஓர் அதிகார மையமாக சித்தரித்துக் காட்ட முயல்வது சிரிப்புக்கான விஷயமே தவிர சிந்திப்பதற்கான பொருள் அல்ல!

திண்டுக்கல் லியோனி அவர்கள் பட்டிமன்றம் நடத்த வேண்டிய விஷயம் தான் இது! ஆனால் அதனால் மாணவர்கள் எதிர்காலம் பாதிக்கப்படுவதும்...தமிழக மக்களுக்கான திட்டங்கள் தள்ளிப் போடப்படுவதும் விளையாட்டான வேடிக்கை பார்ப்பதற்கான விஷயங்கள் அல்ல! வைதிகம் என்பது ஒரு வகையான வியாதி! அது சற்று முற்றிப் போனால் இப்படி எல்லாம் செய்ய வைக்கும்! அதனை விரட்டியடிக்கக் கூடிய ஒரே மருந்து பகுத்தறிவு தான் என்பதனை திராவிடத் தமிழர்கள் நன்கு அறிவார்கள்!

ஆனாலும் நமது மாநில மக்களிடம் தந்திரமான பிரச்சாரங்களுக்கு மயங்குகின்ற மனப்பான்மை இன்னமும் சிறிதளவு இருக்கத்தான் செய்கிறது! அப்படி நாம் மக்களாட்சி காலத்தில் வஞ்சகர்களின் அரசியல் லாபங்களுக்காகவோ, பதவி மோகங்களுக்காகவோ, அவர்களின் தந்திரப் பேச்சுக்களைக் கேட்டு மயங்கி விடுவதனால் சாதுரியம்மிக்கவர்கள் சர்வாதிகாரிகளாக மாறிவிட வழி வகுத்து விடும்! அவர்கள் சுதந்திரத்தையே கேலிக்கூத்தாக்கி விடுவார்கள்!

சுதந்திர வாழ்வினை தொடர்ந்து காத்திட சிதறாத சிந்தனைத் தெளிவு தான்மக்களுக்கு அடிப்படைத் தேவை! இதனைத் தான் நேற்று முன்தினம் அமைச்சர் பொன்முடி அவர்கள் புரிய வைக்க முயன்றார்! திராவிடம் என்பதோ....கழகம் என்பதோ....ஒருமுறை அதனை உருவாக்கி விட்டால் அதைப் பார்த்துக் கொண்டே காலம் காலமாக மகிழ்ச்சியோடு நாம் வாழ்ந்து விட முடியாது! எப்போதும் விழிப்போடு இருந்து, அதில் விரிசல் விழுந்து விடாமல், வெடிப்புகள் ஏற்படாமல், விலகிப் போனவர்கள் பதவி ஆசையினால் விபத்துக்களை உண்டாக்கி விடாமல் அவ்வப்போது கண்காணித்து வரவேண்டும்! பழுது பார்க்க வேண்டும்! பகைவர்கள் ஏற்படுத்துகின்ற பயமுறுத்தல்களை சமாளிக்க நமக்குள் ஒற்றுமையை பேணிக் காக்க வேண்டும்!

இதனைத் தான் 50 ஆண்டுக்கும் மேலாக வெகு சிறப்பாக செய்து வந்தார் நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர்! தமிழினத்தின் மாபெரும் கப்பலான கழகத்தை மாசற்ற, சேதங்கள் அற்ற, உலக மக்கள் வியந்து பார்க்கும் வண்ணம் வீரியத்துடனும் சாதுரியமாகவும் நடத்திக் காட்டிய மாலுமி தான் நமது கலைஞர்!

அவரது மகன் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் தந்தையின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற வேளையில்....அவரிடம் ஒப்படைக்கப்பட்ட அதே கப்பலை இந்திய ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் கடும் போரில் முன்நடத்திச் செல்ல களம் இறங்கி விட்டார்! 'திராவிட அரசியல்' என்ற மக்களாட்சித் தத்துவ ஆயுதத்தை கையில் ஏந்தி, அறிஞர் அண்ணாவின் அறிவாயுதத்தைக் கேடயமாக்கி.... கலைஞரின் ஓயாத உழைப்பு என்ற தாரக மந்திரத்தோடு - பெரியாரின் உலகம் போற்றும் பகுத்தறிவு வெளிச்சம் காட்டும் பாதையிலே வெற்றி நடை போட ஆரம்பித்திருக்கிறார்! அவர் பின்னாலே வருகின்ற அவரது தளபதிகளையும் தம்பிகளின் படையையும் கூட்டணித் தலைவர்களின் அணிவகுப்பையும் அவர்களது தொண்டர்களின் வீரத்தையும்; அத்தனை பேரும் ஒன்றாக எழுப்புகின்ற முழக்கங்களையும் கேளுங்கள். பாருங்கள், அப்போது புரியும் தமிழனின் உண்மை வரலாறு!

கழகத்தின் முன்னாள் போர் தளபதி கலைஞரின் நூற்றாண்டு விழா தொடங்கியதும் இந்திய சனநாயக மீட்பு போராட்டமும் தொடங்கிவிட்டது! 2024 ஜீன் மூன்றாம் தேதி கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நாளன்று நாம் அப்பழுக்கற்ற அந்த தலைவருக்கு வழங்கப் போகின்ற பரிசு.....இந்திய நாடாளுமன்றத்தில் மலரப்போகின்ற; நமது முதல்வரின் திராவிட அரசியல் கொள்கை கொண்ட கலைஞரின் கூட்டாட்சி... மாநிலத்தில் விடியப் போவது சுயாட்சி! வாழ்க கலைஞர் புகழ்!

வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜெ. அன்பழகன்

ஜூன் 10 (2020)

மிசா பழக்கடை ஜெயராமன் மகனான இவர், தனது பள்ளிப் பருவம் முதலே தீவிர கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் தியாகராயர் நகர் பகுதியில் சார்பு மன்றச் செயலாளர், பகுதி பிரதிநிதி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், பகுதிக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர் என படிப்படியாக, சார்பு மன்ற செயலாளர் முதல் மாவட்டச் செயலாளர் வரை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் சென்னை மாவட்ட தளகர்த்தர்களில் ஒருவராக விளங்கியதோடு, கலைஞர் அவர்களைத் தனது தந்தையின் இடத்தில் வைத்துப் போற்றியவர். தியாகராயர் நகர் பகுதியிலும், ஒருங்கிணைந்த தென்சென்னை மாவட்டத்திலும், பிறகு சென்னை மேற்கு மாவட்டத்திலும் கழகத்திற்குச் சிறப்பாக வலுவூட்டியவர்.

கழகத் தலைவர் அவர்கள் இளைஞரணிச் செயலாளராக இருந்த காலம்தொட்டே அவரது நம்பிக்கை மிகுந்த உடன்பிறப்பாக, கொள்கைத் தோழனாக, இயக்கத்தின் இலட்சிய சகோதரன் என்கிற உணர்வுடன் நெருங்கிப் பழகியவர்.

2001 தியாகராயர்நகர் தொகுதியிலும், 2011, 2016களில் சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.

1976ல் இந்திராகாந்திக்கு கருப்பு கொடி காட்ட திட்டமிட்டதாக கைது மற்றும் 1986ல் சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி திணிப்பு போராட்டம், விலைவாசி போராட்டம் என கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, அப்போராட்டங்களை முன்னெடுத்து வெற்றிபெற பாடுபட்டவர்.

"மக்கள் பணியிலேயே தன்னுயிர் ஈந்த அன்புச் சகோதரர் ஜெ.அன்பழகனின் பொதுவாழ்வு – கழகப்பணி – தியாக உணர்வுக்குத் தலைவணங்கி, கண்ணீர் பெருக்குவதன்றி, வேறு வழி எனக்குத் தெரியவில்லை" என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தமிழகத்தில் 5 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு !

சென்னை, ஜூன் 10 - தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வளிமண்டலத்தில் நிலவும் வெப்ப சலனம் காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

10.06.2023 முதல் 13.06.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29-30 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும்.

அதிகபட்ச வெப்பநிலை: 09.06.2023: தமிழக உட்பகுதிகளில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை நிலவக்கூடும். இன்று (10.06.2023) தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 39 டிகிரி முதல் 41 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்; ஓரிரு இடங்களில் இயல்பிலிருந்து 2 4 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது வெப்ப அழுத்தம் காரணமாக அசௌகரியம் ஏற்படலாம்.